



மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலை முன்னிட்டு, வேட்பாளர் இ.பரந்தாமனை ஆதரித்து, சட்டமன்ற எதிர்க்கட்சி தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிரச்சாரம் குறித்து, முன்னாள் அமைச்சரும், சட்டமன்ற தி.மு.கழக கொறடாவுமான எ.வ.வேலு அவர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் ஆலோசனைகள் வழங்கினார். உடன் முன்னாள் சட்டப்பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் எம்.எஸ்.தரணிவேந்தன், சி.என்.அண்ணாதுரை, த.உதயசூரியன், வசந்தம் கார்த்திகேயன் எம்.எல்.ஏ., இரா.ஶ்ரீதரன், வசந்தவேல். எம்.எல்.ஏ. மற்றும் கழக நிர்வாகிகள் இருந்தனர்.

## மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தல் கனிமொழி இராஜாத்தி கருணாநிதி எம்.பி. பிரச்சாரம்!



மதுராந்தகம் சட்டப்பேரவைத் தொகுதி இடைத்தேர்தல் - 2026 தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சியின் கழக வேட்பாளரான இ.பரந்தாமனை ஆதரித்து கழக துணைப் பொதுச்செயலாளர் கனிமொழி இராஜாத்தி கருணாநிதி, எம்.பி., அவர்களின் தேர்தல் பிரச்சாரச் சுற்றுப்பயணம்

**நாள் : 30.09.2026**

| வ.எண் | நேரம் | இடம் |
|---|---|---|
| 1. | மாலை 4.00 மணி | கருங்குழி – மகளிர் சந்திப்பு |
| 2. | மாலை 5.00 மணி | மதுராந்தகம் (கடப்பேரி) வேன் பிரச்சாரம் |
| 3. | மாலை 6.00 மணி | சரவம்பாக்கம் வேன் பிரச்சாரம் |
| 4. | மாலை 7.00 மணி | பெரும்பேர்கண்டிகை மகளிர் கூட்டம் |
| 5. | இரவு 8.00 மணி | கீழ்அத்திவாக்கம் கூட்டுச்சாலை (வேன் பிரச்சாரம்) |

``அண்ணா அறிவாலயம்”
சென்னை18.
நாள்: 25.09.2026

**தலைமைக் கழகம்,**
தி.மு.க.

### மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தல்

# சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் பிரச்சாரம்!

## ஆலோசனைக் கூட்டத்தில் முன்னாள் அமைச்சர் எ.வ.வேலு சிறப்புரை!



மதுராந்தகம், செப். 28-

மதுராந்தக சட்டமன்ற இடைத்தேர்தலை முன்னிட்டு முன்னதாக பூத் நிர்வாகிகளுடன் ஆலோசனைக் கூட்டம் எ.வ.வேலு தலைமையில் நடைபெற்றது.

இந்த ஆலோசனைக் கூட்டத்திற்கு முன்னாள் சட்டப்பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் மு.பெ.கிரி, பெ.சு.தி.சரவணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

அக்டோபர் ஆறாம் தேதி மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதி இடைத் தேர்தல் நடைபெற உள்ளது. அதற்கான வாக்கு சேகரிப்புப் பணிகள் தீவிரமடைந்துள்ளது.

அதன் ஒரு பகுதியாக அச்சரப்பாக்கம் ஒன்றியம் படூர் ஊராட்சியில் 45 பூத் நிர்வாகிகளுடன் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இந்த ஆலோசனைக் கூட்டத்தில் முன்னாள் அமைச்சர் எ.வ.வேலு சிறப்புரை ஆற்றினார். அப்போது பேசிய அவர் 6ஆம் தேதி நடைபெற உள்ள மதுராந்தகம் சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தலில் தி.மு.க. அதிக வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற வேண்டும் அதற்காக அனைத்து நிர்வாகிகளும் தீவிரமாக பணி செய்திட வேண்டும் எனவும் குறிப்பாக ஒவ்வொரு வீடுகளாகச் சென்று வாக்காளர்களை சந்தித்து கடந்த தி.மு.க. ஆட்சியில் கொண்டு வரப்பட்ட திட்டங்களை எடுத்துரைத்தும் தற்போது நடைபெற்று வரும் தாவீக அரசின் அவல நிலைகளை எடுத்துரைத்து வாக்கு சேகரிக்க வேண்டும் எனவும் மேலும் திண்ணைப் பிரச்சாரம் செய்ய வேண்டும் எனவும் வலியுறுத்தினார். இளைஞரணிச் செயலாளரும் முன்னாள் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் பிரச்சாரம் அனைவரும் சிறப்பாக பணியாற்றிட வேண்டும். மேலும் கூட்டணி கட்சியான தே.மு.தி.க. பொதுச் செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் அவர்களின் பிரச்சாரம் கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி. அவர்களின் பிரச்சாரம் உள்ளதால் அனைவரும் சிறப்பாக பணியாற்ற வேண்டுமென கேட்டுக் கொண்டார்.

ஆலோசனைக் கூட்டத்தின்போது நாடாளுமன்ற உறுப்பினர்கள் எம்.எஸ்.தரணிவேந்தன், சி.என்.அண்ணாதுரை, த.உதயசூரியன், வசந்தம் கார்த்திகேயன் எம்.எல்.ஏ., இரா.ஶ்ரீதரன், வசந்தவேல் எம்.எல்.ஏ., அருணை வெங்கட் மற்றும் கழக நிர்வாகிகள் இருந்தனர்.

### நடிப்பவர்களுக்கு வாக்களித்தால் மக்கள் பிரச்சினை தீராது!

# மக்களுக்காக உழைக்கக் கூடியவர்களுக்கு துணை நில்லுங்கள்!

## தே.மு.தி.க. பொதுச் செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் எம்.எல்.ஏ. பேட்டி!



விருத்தாச்சலம், செப்.28-

நடிப்பவர்களுக்கு வாக்களித்தால் மக்கள் பிரச்னை தீராது என்று தே.மு.தி.க. பொதுச்செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் கூறினார்.

தே.மு.தி.க. பொதுச்செயலாளரும் எம்.எல்.ஏ.வுமான பிரேமலதா விஜயகாந்த் விருத்தாச்சலத்தில் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

ஆளுங்கட்சி களத்திற்கு வராமல் அங்கேயே உட்கார்ந்து கொண்டு பேசிக் கொண்டிருந்தால் வேலைக்கு ஆகாது. மக்கள் ஓட்டு போட்டு இருக்கிறார்கள். அனைவரும் களத்திற்கு வர வேண்டும். நேரடி நெல் கொள்முதல் நிலையத்தில் சுமை தூக்கும் தொழிலாளர்களுக்கு ஒரு மூட்டைக்கு பத்து ரூபாய் என்பது பத்தாது. விலைவாசி அந்த அளவிற்கு ஏறிவிட்டது. இதில் அரசு கவனம் செலுத்த வேண்டும். ஆனால் அரசின் கவனம் வேறு எங்கேயோ இருக்கிறது. இடைத்தேர்தல் வேறு வந்துவிட்டது. தேவையில்லாமல் ராஜினாமா செய்து இவர்களாகவே ஒரு இடைத்தேர்தலை கொண்டு வந்து விட்டார்கள்.

நேர விரயம் பண விரயம் தான். லஞ்சமே இல்லாத நேர்மையான ஆட்சி என்கிறார்கள். யார் மக்களுக்காக பேசுகிறார்கள், யார் மக்களுக்காக உழைக்கிறார்கள் என்பதை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும். ரீல்ஸ் போடுவது, போட்டோ ஷூட் பண்ணுவது இவர்களை தான் மக்கள் நம்புகிறார்கள். யார் மக்களை நேசிக்கிறார்கள், யார் மக்களுக்காக உழைக்கிறார்கள் என்று பார்த்து அவர்களுக்கு மக்கள் துணை நில்லுங்கள், நடிப்பவர்களுக்கு வாக்களித்தால் மக்கள் பிரச்னை தீராது.

இவ்வாறு அவர் கூறினார்.

### மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த கழக அரசு பாடுபட்டதை எண்ணிப் பாரீர்!

# பொய்யான செய்திகளை வெளியிட்டு ரீல்ஸ் போடும் த.வெ.க. அரசுக்கு பாடம் புகட்டுங்கள்!

## மதுராந்தகம் தொகுதி இடைத்தேர்தல் பிரச்சாரத்தில் மேயர் பிரியா ராஜன் வேண்டுகோள்!

மதுராந்தகம், செப்.28–

மதுராந்தகம் சட்டமன்ற தொகுதி பாகம் 3ல் உட்பட்ட சூறை ஊராட்சி கிராமத்தில் சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா கழக வேட்பாளர் பரந்தாமன் அவர்களை ஆதரித்து பிரச்சாரம் மேற்கொண்டு தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார்.

இந்த பிரச்சாரத்தின் போது மேயர் பிரியா அப்பகுதியை சார்ந்த தாய்மார்கள் மற்றும் பெண்களுடன் கலந்துரையாடினார். அப்பொழுது பெண்கள் தான் இந்த சமுதாயத்திற்கு முக்கியமானவர்கள் ஒரு குடும்பத்தையே வழிநடத்தக் கூடியவர்கள்.

ஏற்கனவே இங்கே கடந்த நான்கு மாதங்களுக்கு முன்பு நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் வெற்றி பெற்றவர் தன்னுடைய சுயநலத்திற்காக பதவியை ராஜினாமா செய்துவிட்டு வேறு ஒரு கட்சியில் சேர்ந்திருக்கிறார்.

**இடைத்தேர்தல் வருவதற்கு த.வெ.க.வே காரணம்!**

எப்பொழுதுமே ஒரு தொகுதிக்கு இடைத்தேர்தல் என்பது அந்த தொகுதியில் வெற்றி பெற்ற வேட்பாளர் மரணமடைந்தால் மட்டுமே வரும். ஆனால் இப்பொழுது வெற்றி பெற்றவர் உயிரோடு இருக்கும் பொழுதே இடைத்தேர்தல் வருகிறது. இதற்கு முக்கிய காரணம் தற்போது உள்ள த.வெ.க. ஆட்சி தான்.

ஒரு சட்டமன்ற உறுப்பினர் எந்தக் கட்சியில் இருந்தாலும் பொது மக்களுக்கு சேவை செய்ய வேண்டியது அவருடைய கடமை.

எந்த கட்சி ஆளுங்கட்சியாக வருகிறதோ அந்த கட்சிக்கு நான் மாறி விடுவேன் என்று சொல்வது அது அவர்களுடைய சுயநலம். திருமதி மரகதம் குமரவேல் அவர்கள் தன்னுடைய சுயநலத்திற்காக பொதுமக்களாகிய நீங்கள் அளித்த அனைத்து வாக்குகளையும் வீணாக்கி உள்ளார்.

திருமதி மரகதம் குமரவேல் எடுத்த ஒரு முடிவினால் ஓட்டுப் போட்ட இந்த தொகுதியின் மொத்த மக்களும் ஏமாற்றப்பட்டுள்ளனர்.

**த.வெ.க. வேட்பாளர் வெற்றி பெறக் கூடாது!**

அவர் மறுபடியும் வெற்றி பெற்றால் இதே ஏமாற்றம் தான் மக்களுக்கு திரும்பக் கிடைக்கும் மே மாதம் நடைபெற்ற தேர்தலில் ஒரு கட்சி சின்னத்தில் ஓட்டு கேட்டு வந்தார். இப்பொழுது இன்னொரு கட்சி சின்னத்தில் ஓட்டு கேட்டு வருகிறார். அவர் மீண்டும் வெற்றி பெறக் கூடாது. ஏனென்றால் அவர் வெற்றி பெற்றால் அடுத்த முறை வேறொரு கட்சியின் சார்பாக வந்து இங்கே ஓட்டு கேட்டு வருவார்.

**பெண்களுக்கு முக்கியத்துவம் அளிப்பவர் எங்கள் தலைவர்!**

அந்த வேட்பாளருக்கு அவருடைய சுயநலம் மட்டும்தான் முக்கியமாக உள்ளது. எந்த கட்சியில் இருந்தாலும் மக்களுக்கே தேவையானதை சட்டமன்றத்தில் பேசி போராடி பெற வாய்ப்பு உள்ளது.

ஆனால் அவர் அதை செய்யாமல் தன்னுடைய சுயநலத்திற்காக பதவியை ராஜினாமா செய்து விட்டு கட்சியில் இணைந்துள்ளார்.

கடந்த ஐந்தாண்டுகள் திராவிட முன்னேற்ற கழகத்தின் தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டா லின் அவர்கள் பெண்களுக்கு முக்கியத்துவம் அளித்து சிறப்பான ஆட்சியை வழங்கினார்.

பொதுவாக கிராமப்பு றங்களில் பெண் பிள்ளைகளை பத்தாம் வகுப்பிற்கு மேல் கல்லூரிக்கு அனுப்ப மாட்டார்கள். ஆனால் கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் மாணவிகள் படிக்க வேண்டும் என்பதற்காக மாதம் ரூபாய் 1000 புதுமைப்பெண் திட்டம் என்ற ஒரு திட்டத்தை உருவாக்கி உதவித்தொகை வழங்கி அவர்களை படிப்பதற்கு கல்லூரி படிப்பதற்கு வழிகாட்டினார்.

பெண்கள் தன்னுடைய தாய் வீட்டிற்கு செல்லும் பொழுது கூட கணவர்கள் இவ்வளவு செலவாகும் அவ்வளவு செலவாகும் என்று எதற்கு போக வேண்டும் என்று கேள்வி கேட்பார்கள்.

பல பெண்கள் தங்களுடைய குடும்ப வாழ்வாதாரத்திற்காக முக்கியமான மார்க்கெட் பகுதிகளில் பொருட்களை வாங்கி வந்து தங்களுடைய பகுதிகளில் விற்று குடும்பத்தை காப்பாற்றி வருவார்கள் அவர்களுக்கெல்லாம் பயணம் செய்வதற்கு இலவச பேருந்து பயணத்தை வழங்கியவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள்.

மகளிர் சுயமாக தொழில் செய்ய ஏதுவாக மகளிர் சுய உதவிக் குழுக்களை உருவாக்கியவர் கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள். அது மட்டுமின்றி அவர்களுக்கு தொழில் செய்ய 5 லட்சமாக வழங்கப்பட்டு வந்த கடனை 10 லட்சமாக உயர்த்தி வழங்கியவரும் கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தான்.

இப்படி பெண்களுக்காக பெண்களின் வாழ்வாதாரத்திற்காக கல்விக்காக நிறைய திட்டங்களை செயல்படுத்தி கடந்த ஐந்து ஆண்டுகள் ஆட்சி நடத்தியவர் தலைவர் அவர்கள்.

தி.மு.க. வெற்றி பெற்று ஆட்சி அமைத்திருந்தால் ஒவ்வொருவருக்கும் 8000 கூப்பன் வழங்கப்பட்டிருக்கும். அதை வைத்து நீங்கள் உங்களுடைய வீட்டிற்கு தேவையான முக்கியமான பொருட்கள் பிரிட்ஜ் வாஷிங் மெஷின் மிக்ஸி இது போன்ற ஏதேனும் ஒரு முக்கிய பொருட்களை வாங்கிக் கொள்ளலாம் ஆனால் தற்போது ஆட்சிக்கு வந்துள்ளவர்கள் ஆட்சிக்கு வந்தவுடன் மகளிர் உரிமைத் தொகையை 2000 ரூபாயாக வழங்குவோம் என்று சொன்னார்கள் ஆனால் அதை வழங்கவில்லை.

**வாக்குறுதியை நிறைவேற்றாத த.வெ.க. அரசு!**

இந்த கிராமத்தை சேர்ந்த ஒரு பாட்டி என்னிடம் தெரிவிக்கும்போது அந்த ஆயிரம் ரூபாய் வைத்து தான் மருந்து வாங்கி நான் இப்பொழுது வரை உயிரோடு இருக்கிறேன் என்று சொல்கிறார்.

கழகத் தலைவர் அவர்கள் ஆட்சியில் வழங்கப்பட்ட இந்த ஆயிரம் ரூபாய் ஒரு சமூகத்தில் எந்த அளவிற்கு ஒருவருக்கு உதவிகரமாக உள்ளது என்பதற்கு இதுவே எடுத்துக்காட்டு.

பெண்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக திட்டங்களை செயல்படுத்துவது தான் ஒரு நல்ல அரசாங்கம் ஆனால் இன்று வந்துள்ள அரசாங்கத்தினர் ரீல்ஸ் மற்றும் பொய்யான செய்திகளை வெளியிட்டு சினிமாவில் பேசுவது போல் டயலாக் பேசிக் கொண்டிருக்கிறார்கள்.

மக்களுக்கு தேவையான ஒரு நல்ல ஆட்சி அமைய வேண்டும் என்றால் மதுராந்தகம் சட்டமன்ற தொகுதியில் தி.மு.க.வின் வேட்பாளர் வெற்றி பெற வேண்டும்

எனவே இங்குள்ள அனைத்து தாய்மார்களும் உங்களுடைய வாக்குகளை உதயசூரியன் சின்னத்திற்கு அளிக்க வேண்டும் அதேபோன்று உங்களுடைய பிள்ளைகளையும் உங்களுடைய கணவர்மார்களையும் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்களிக்க வேண்டும் என்று எடுத்து சொல்ல வேண்டும்.

**குழந்தைகளின் எதிர்காலம் என்ன ஆவது?**

மே மாதம் நடந்த தேர்தலில் வீட்டில் உள்ள குழந்தைகள் சொன்னார்கள் என்று ஓட்டு போட்டு விட்டீர்கள். ஆனால் இப்பொழுது அப்படி செய்யக்கூடாது. குழந்தைகள் பேச்சைக் கேட்டு ஓட்டை போட்டு விட்டால் அவர்களுடைய எதிர்காலம் என்ன ஆவது.

அந்த குழந்தைக்கு தேவையான கல்வி எப்படி வரும்? ஒரு பெண் குழந்தைக்கு பாதுகாப்பு எப்படி வரும்? ஒரு ஆண் குழந்தை வீட்டை விட்டு வெளியே செல்லும்போது அது நல்ல முறையில் சமூகத்தில் வளர வேண்டும். இதெல்லாம் ஒரு குழந்தைக்கு கிடைக்க வேண்டுமென்றால் நல்ல சமூகமும் நல்ல ஆட்சியும் அமைய வேண்டும். அதற்கு அனைவரும் உதயசூரியன் சின்னத்தில் வாக்களிக்க வேண்டும்.

இவ்வாறு சென்னை மாநகராட்சி மேயர் பிரியா ராஜன் வாக்குகள் சேகரித்து உரையாற்றினார்.





மதுராந்தகம் சட்டமன்ற தொகுதி மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி வெற்றி வேட்பாளர் இ.பரந்தாமன் அவர்களை ஆதரித்து கிணார் ஊராட்சியில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டச் செயலாளர் முன்னாள் அமைச்சர் தா.மோ. அன்பரசன், வீடுவீடாக சென்று பொதுமக்களை நேரில் சந்தித்து உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகளை சேகரித்தார். அருகில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி, பகுதி செயலாளர் வே.கருணாநிதி, எஸ்.சதீஷ் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.



கழக தணிக்கை குழு உறுப்பினர் தி.அ. முகமது சகி ஏற்பாட்டில் இடைத்தேர்தல் நடைபெறும் மதுராந்தகம் தொகுதியில் மதுராந்தகம் ஒன்றியத்திற்கு உட்பட்ட மோகல்வாடி முதல் நிலை ஊராட்சியில் மாற்றுத்திறனாளிகள் அணியின் சார்பில் தேர்தல் பிரச்சாரத்தில் மாநில செயலாளர் பேராசிரியர் தீபக், மாநில தலைவர் ரெ.தங்கம் மற்றும் மாநிலத் துணைச் செயலாளர்கள் எழிலன். வேங்கை வெங்கடேஷ். வசந்த் ஜெயராமன். கருணாகரன் புஷ்பராஜ் மற்றும் மாவட்ட சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் வெங்கட், செங்கல்பட்டு ஊராட்சி கவுன்சிலர் மான் குமார் மற்றும் கழக உடன்பிறப்புகள் திரளானோர் கலந்து கொண்டு வாக்கு சேகரித்தனர்.